

குமரியின் வரலாற்றுப் பெருமை

பழந்தமிழரால் பகுக்கப்பட்ட குறிஞ்சியும், முல்லையும், மருதமும், நெய்தலுமாகிய நால்வகை நிலங்கள் ஒருங்கே அமையப் பெற்ற பகுதி குமரி மாவட்டம். மூவேந்தர்களுள் ஒருவரான சேரர்கள் ஆண்ட பூமி. அப்போது சேர நாடு எனப்பட்டது. இந்தியப் பெருங்கடலுடன் அரபிக்கடலும் வங்கக்கடலும் முத்தமிடும் நீலத்திரைகடல் ஓரத்திலே நின்று நித்தம் தவம் செய் அன்னை நிற்கும் குமரி அன்னை நிற்கும் முனையைக் கொண்ட முத்தான பூமி. உலகின் மிகப்பழமையான மேற்குத் தொடர்ச்சி மலை இங்கிருந்தே தொடங்குகிறது.... பல்லுயிர் வளங்கள் நிறைந்த பகுதி மேற்குத் தொடர்ச்சி மலை.

கன்னியாகுமரி மாவட்டத்தின் தலைநகர் நாகர்கோயில். இங்கு நாகரம்மன் கோயில் இருப்பதனால் இப்பெயர் வந்தது. ஆனால் முற்காலத்தில் இந்நகரம் 'கோட்டாறு' என அழைக்கப்பட்டது... மிகப்பிரபலமான வணிகத் தலம் இது. இன்று 'கோட்டாறு' நாகர்கோயிலின் ஒரு பகுதியாக உள்ளது.

இயேசு கிறிஸ்துவின் சீடர்களுள் ஒருவரான புனித தோமா கி.பி.52ல் இந்தியாவுக்கு வந்தார். கன்னியாகுமரி மாவட்டம் திருவிதாங்கோட்டில் புனித மேரிமாதா ஆலயத்தைக் கட்டினார். கட்டி முடிக்கப்படாத அந்த ஆலயம் அரைப்பள்ளி என அழைக்கப்பட்டு பன்னாட்டு திருத்தலமாக உள்ளது.

வேணாட்டரசர்களின் அரண்மனையாக விளங்கிய பத்மனாபபுரம் அரண்மனையும், இன்றும் பிரசித்தி பெற்ற கலைக் கூடமாக விளங்குகிறது. கல்லாலும், மணல்+சுண்ணாம்பு இவற்றாலும் கட்டப்பட்ட இந்த அரண்மனை இன்றும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப்பயணிகள் கண்டுகளிக்கும் தலமாக விளங்குகிறது. இங்குள்ள போர்க்கருவிகள், சிற்பங்கள், மரவேலைப்பாடுகள் அந்நாளைய வரலாற்றை சொல்லிக் கொண்டேயிருக்கின்றன... அரண்மனையைச் சுற்றிலும் மாபெரும் கற்களால் அமைக்கப்பட்ட 'கோட்டை' அன்றைய மக்களின் வலிமையை, வீரத்தை எடுத்துக்காட்டும் அழியாச் சின்னமாகும்.

வேணாட்டரசர்களின் இராணுவத்தளமாக விளங்கியது வட்டக் கோட்டை, மருந்துக் கோட்டையும் புலியூர்க்குறிச்சியும் வேணாட்டரசர்களின் வரலாற்றை பறை சாற்றி நிற்கின்றன....

சுசீந்திரம் தாணுமாலயன் கோயிலும் கோட்டாறு சவேரியார் ஆலயமும், கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலும், திருவட்டாறு ஆதிகேசவ பெருமாள் கோவில், மண்டைக்காடு பகவதியம்மன் கோவில், முளகுமூடு மரியன்னைபசலிக்கா பேராலயம், தக்கலை பள்ளி வாசல், சுவாமித்தோப்பு வைகுண்டர் தலைமைப்பதி ஆகியன இம்மாவட்டத்தின் ஆன்மிக அடையாளங்கள் ஆவன.... கோட்டாறு தூய சவேரியார் ஆலயம் முதன் முதலில் தூய சவேரியாரால் சிறியதாக அமைக்கப்பட்ட பெருமை உடையது. திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாள் கோவில் குறித்து நம்மாழ்வார் பதினொரு பாடல்கள் பாடியுள்ளார்.

தமிழின் தொன்மையான இலக்கண நூல் தொல்காப்பியம். இந்நூலை யாத்தவர் தொல்காப்பியர்..... இவருக்கு கற்பித்த ஆசிரியர் அதங்கோட்டாசான்... குமரி மண்ணில் தோன்றிய மகான். எத்தனை பெருமை குமரி மண்ணிற்கு!

கன்னியாகுமரி மாவட்டம் தென்திருவாங்கூரின் ஒரு பகுதியாக இருந்தது. அந்நாள்களில் உயர்சாதி என சொல்லிக்கொண்டவர்களால் பிற்பட்ட சாதி என ஒதுக்கப்பட்டவர்கள் மிகக் கொடுமைப்படுத்தப்பட்டனர். இக்கொடுமைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்து தென்னிந்தியாவில் சமூக மாற்றத்திற்கும் ஆன்மிகப் புரட்சிக்கும் வித்திட்டவர் அய்யா வைகுண்டர் என்ற முத்துக்குட்டி சுவாமிகள்.... இப்புனிதர் அவதரித்தது குமரி மண்ணிலே தான்....

விளவங்கோடு வட்டத்திலுள்ளது நட்டாலம். இயற்கை எழில் கொஞ்சும் நட்டாலத்தில் நீலகண்ட பிள்ளையாய் பிறந்து, வேணாட்டரசர்களின் ஆட்சித் தலைநகராம் பத்மனாபபுரம் கோட்டையிலே நிதியமைச்சராக பதவி பெற்று, கிறித்தவ மறையைத் தழுவினார் என்று குற்றம் சாட்டி கொடுமைகளுக்கு ஆளாகி ஆரல்வாய் மொழி காற்றாடி மலையிலே கொல்லப்பட்டு, இன்று புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்ட லாசர் என்ற தேவசகாயம் பிள்ளை தோன்றியது குமரி மாவட்டம்.



தமிழகத்து தலைவர்களில், தியாகிகளில் ஒருவராக போற்றப்படும் எளிமையின் சின்னம் தோழர் ஜீவானந்தம் தோன்றியது குமரி மண்.... சாதி வேறுபாடுகளை களையக் சமய சகிப்புத்தன்மை வளர, வர்க்க பேதத்தை ஒழிக்க குரல் கொடுத்தவர் தோழர் ஜீவா.... தொழிலாளர்களின் உரிமைக்காக போராடிய தோழர் ஜீவா வரலாற்றில் வாழ்கிறார்... கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை என்னும் தமிழ்மணியும், சதாவதானி செய்குத்தம்பி பாவலரும் தோன்றியது குமரி மண்.

மலையாள நாட்டுடன் இணைந்திருந்த குமரி மண்ணை, தாய்த்தமிழகத்துடன் இணைக்க தன் வாழ்நாளெல்லாம் போராடி வெற்றிகண்ட மார்சல் நேசமணியை குமரித்தந்தை எனப் போற்றுகிறோம்.... மார்ஷல் நேசமணி என்ற மாவீரனை தமிழகத்துக்கு தந்தது குமரி மண்!

வேணாட்டு ஆட்சியாளர்களின் இறுதிக் காலத்தில் சமண சமயமும் இங்கு சிறப்புடன் இருந்தது. இதற்கு சான்றாக திருநந்திக்கரை, குறண்டி, சிதறால் ஆகிய சமணத்துறவிகள் வாழ்ந்த பகுதிகள் உள்ளன. இவை குமரி மண்ணுக்கு தனிச்சிறப்பைத் தருவனவாகும்....

குளச்சல் போர் நினைவுத்தூணும், முட்டம் கலங்கரை விளக்கமும், மாத்தூர் தொட்டிப்பாலமும், குமரி மாவட்டத்தின் வரலாற்றுப் பெருமையை என்றும் பறை சாற்றும்.....

இவ்வாறு பழம்பெருமை பெற்ற இந்த மண்ணிலே திருநயினார்க்குறிச்சி ஊரில்தான் தெய்வப்புலவர் திருவள்ளுவர் தோன்றினார் என்பதை தனிச்சிறப்பாகக் கொள்ள வேண்டும்!



மூவேந்தர் ஆண்ட குமரி மண்

குமரிக்கண்டம் என்னும் லெமூரியாக் கண்டம் ஒன்று இருந்ததாகவும், உலகின் முதல் மனிதன் அங்கு தோன்றினான் என்றும் அப்பகுதி தென்னிந்தியாவின் ஒருபகுதி ஆப்பிரிக்காவின் ஒரு பகுதி இன்றைய சிறீலங்கா ஆகிய நிலப்பரப்புகளை உள்ளடக்கியதாக இருந்தது என்பதும், கடல்கோள் நிமித்தமாக அந்த கண்டம் கடலில் மூழ்கி விட்டதாகவும் வரலாற்றாய்வாளர்கள் கருதுகின்றனர். அப்படிப் பார்த்தால் உலகின் முதல் மனிதன் தோன்றியதே குமரி மண் தான்.... அவர் பேசிய மொழியும் தமிழ் என்பது ஆய்வாளர்களின் முடிவு!


இன்றைய குமரி மாவட்டத்திலுள்ள அகஸ்தீஸ்வரம், தோவாளை ஆகிய வட்டங்கள் கொண்ட பகுதி நாஞ்சில் நாடு என அழைக்கப்பட்டது. ஆனால் இன்றைய நான்கு வட்டங்களும் இணைந்த பரப்பு தென்திருவாங்கூர் என அழைக்கப்பட்டது. முற்காலத்தில் இப்பகுதியை ஆய் மன்னர்கள் ஆட்சி செய்தனர். அவர்களுள் கடையெழு வள்ளல்களுள் ஒருவரான ஆய் அண்டிரன் மற்றும் அதியன், திதியன், நாஞ்சில் வள்ளுவன், கோக்கருந்தடக்கண், வரகுணன் முதலானவர்கள் முக்கியமானவர்கள்.

பாண்டியர்கள்:

தலையாளங்கானம் போருக்குப் பின்னர் ஆய் மன்னர்கள் வலுவிழந்தனர். பாண்டிய மன்னர்கள் ஆட்சியை

கைப்பற்றினர். கன்னியாகுமரி, சேந்தன் புதூர், தாழக்குடி, அழகிய பாண்டிபுரம், பூதப்பாண்டி, கோட்டாறு முதலிய பகுதிகளை ஆண்டனர். செழியன் சேந்தன், அரிகேசரி மாறவர்மன், கோச்சடையன் ரணதீரன், மாறன் சடையன், வீர நாராயண சடையன், இரண்டாம் ராசசிம்மன், வரகுண பாண்டியன் முதலானோர் சிறப்பானவர்கள். மார்த்தாண்டம், மார்த்தாண்டன்துறை, உதயமார்த்தாண்டம் முதலான பெயர்கள் மார்த்தாண்ட வர்மா பெயரால் வழங்கப்படுவன.

சேரர்கள்:



கி.பி.முதலாம் நூற்றாண்டுக்கு முன்னர் சேரர் சோழர் பாண்டியர் தமிழ் நாட்டை ஆண்டனர். சேரநாடு என்பது கேரளம், பூமிநாடு, குடநாடு, குட்ட நாடு, கற்காநாடு, வேணாடு என்னும் குறுநிலங்களைக் கொண்டது. வேணாடு என்பது சேரநாட்டின் தென்பகுதி. இன்றைய குமரியை உள்ளடக்கி இருந்தது. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், உதியன் சேரலாதன், சேரன் செங்குட்டுவன், முதலானோர் அவர்களுள் குறிப்பிடத்தக்கோராவர் "சேரமங்கலம்" என்ற ஓர் ஊர் நெய்யூருக்கு தெற்கே உள்ளதும்.... இங்கு குறிப்பிடத்தக்கது.

சோழர்கள்:

சோழ மன்னரான பராந்தகச் சோழன் ராஜசிம்மன் என்ற பாண்டிய மன்னனைத் தோற்கடித்து கன்னியாகுமரி

சுசீந்திரம் முதலிய இடங்களைக் கைப்பற்றி தன் ஆட்சியை நிறுவினான். இராசராச சோழன் காலத்தில் குமரி மாவட்டம் முழுவதுமே சோழ மன்னர்களின் கீழ் இருந்தது.

விசயநகரம்:

விசயநகரத்து மன்னர்களும் குமரி மாவட்டத்தைத் தாக்கினர். கிருஷ்ண தேவராயர், அச்சுதராயர் முதலானோர் அவர்களுள் குறிப்பிடத்தக்கோர். பின்னர் நாயக்கர்கள் விஜய நகரத்து மன்னர்களைத் தோற்கடித்தனர். திருமலை நாயக்கர், இராணி மங்கம்மாள் ஆகியோர் படையெடுப்பால் நாஞ்சில் நாடு நலிவுற்றது.

சந்தாசாகிப்:

சந்தா சாகிப்பும் குமரி மண்ணின் மீது படையெடுத்தான். கொட்டாரம், சுசீந்திரம், வடசேரி, திருப்பதிசாரம் முதலிய இடங்களை சூறையாடியதோடு ஆலயங்களையும் கொள்ளையடித்தான்.

திருவாங்கூர்:

கர்நாடக நவாப்பும், மார்த்தாண்டவர்மாவும் செய்த உடன்படிக்கையால் போர் நின்றது. அதன்பின்னர் பலராமவர்மா என்ற திருவாங்கூர் மன்னரின் ஆட்சியில் குமரி மாவட்டம் வளர்ந்தது. திருவாங்கூர் அரசு ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டில் வந்தது. பாதுகாப்புக்காக ஒரு சிறுபடை அமைக்கப்பட்டது. அப்படையின் தலைமைத்தளபதியாக கர்னல் மெக்காலே இருந்தார். படையின் பராமரிப்பு செலவுக்காக ஒரு பெரிய தொகை கப்பமாக ஆங்கிலேயருக்கு செலுத்த வேண்டும்...

ஆனால் அந்த தொகையை குறிப்பிட்ட காலத்தில் திருவாங்கூர் மன்னரால் செலுத்த இயலவில்லை. எனவே ஆங்கிலேயருக்கும் திருவாங்கூருக்கும் போர் நிகழ்ந்தது. திருவாங்கூர் படைத்தலைவன் 'வலிய எசமான்' ஆங்கிலேயரால் கொல்லப்பட்டார். தளவாய் வேலுத்தம்பி தற்கொலை செய்து கொண்டார்.

வேணாடு:

'வேள்' மரபினர் ஆண்டதால் "வேணாடு" எனப்பட்டது இவர்கள் சேரமன்னர்களுள் ஒரு பிரிவினர், கடையெழு வள்ளல்களும் வேள் மன்னர்களே! கி.பி.15-ஆம் நூற்றாண்டுக்கும் பின்னரும் வேணாடு நிலைத்திருந்தது!

வேணாடு; நாஞ்சில் நாடு, புறத்தாய நாடு, குறுநாடு, தெங்க நாடு, வள்ளுவ நாடு, படப்பநாடு, முடலநாடு, என்னும் சிறு குறு பிரிவுகளைக் கொண்டிருந்தது. கி.பி.17ம் நூற்றாண்டில் ஆதித்தவர்மா என்னும் வேணாட்டரசர் பத்மனாபபுரத்தை தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தார். அவருக்குப் பின்வந்த மார்த்தாண்ட வர்மா வேணாட்டின் எல்லைகளை விரிவுபடுத்தி தலைநகரை திருவனந்தபுரத்திற்கு மாற்றினார். பின்னர் கல்குளம், விளவங்கோடு, தோவாளை, அகத்தீசுவரம் ஆகிய நான்கு வட்டங்களை இணைத்து குமரி மாவட்டம் உருவானது. பல்வேறு போராட்டங்கள் உயிர்த்தியாகங்களுக்குப்பின் குமரிமாவட்டம் தமிழகத்துடன் இணைந்தது.

நாஞ்சில்நாடு:

அகஸ்த்தீசுவரம் தோவாளை என்னும் இரு வட்டங்களை உள்ளடக்கிய பகுதி இது. நாஞ்சில் பெருநன்,

நாஞ்சில்குறவன், நாஞ்சில் வள்ளுவன் முதலானோர் இப்பகுதியை ஆண்டனர் .... இவ்வாறு சோழ மன்னர்களாலும், பாண்டிய மன்னர்களாலும், நாயக்க மன்னர்களாலும் ஆளப்பட்ட பகுதி நாஞ்சில் நாடு. கிபி.1766ல் திருவாங்கூர் மன்னனும், கர்நாடக நவாபும் ஓர் உடன்படிக்கை செய்தனர். அதன்படி இந்நாளின் குமரி முதல் கேரளாவிலுள்ள வடக்கன்பரவூர் வரையிலும் திருவாங்கூர் மன்னரின் ஆட்சிப்பகுதியானது. திருவாங்கூர் கொச்சியுடன் இணைந்திருந்த குமரி மாவட்டம் இன்று தாய் தமிழகத்தின் ஒரு பகுதியாகவுள்ளது.

குமரி மண்ணில் தோன்றிய மாபெரும் புலவர்கள்

அகத்தியர்
அதங்கோட்டாசான்
திருவள்ளுவர்
ஔவையார்
தொல்காப்பியர்
ஒரு சிறைப்பெரியனார்
மருங்கூர் கிழாக்கண்ணனார்
பகைச்சாத்தன் பூதனார்
பட்டினத்து சேந்தன் குமாரனார்
இரணியல் முட்டத்துப் பெருங்குன்றூர் பெரும்பாணார்.
கடியலூர் உருத்திரங்கண்ணனார்
கோட்டாற்று இளம் பெரும்பாணார்
வேணாட்டடிகள்
அகில கலாவல்லபன் சேரமான்
- பெருமாள் வஞ்சி மார்த்தாண்டன்
சிவஞான முனிவர்
திருவனந்தம் பிள்ளை

நம்மாழ்வார்
கோட்டாறு சிறீகணபதி ஆசாரி
சதாவதானி செய்குத்தம்பி பாவலர்
கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை
சாஸ்தான் குட்டிப் பிள்ளை
தசாவதானி ஆறுமுகனார்
ஆளூர் சிதம்பர குற்றாலம் பிள்ளை
சி. ஆதிமூலப் பெருமாள்
கவிஞர் தே.ப.பெருமாள்
கவிஞர் குற்றாலம் பிள்ளை முதலானோர்"

(ஆதாரம். குமரி மாவட்ட நாடக வரலாறு
இரணியல் கலைத்தோழன்)

குமரி மண்ணின் கலைகள்:

கும்மிப்பாட்டு, ஆடல்பாடல், நையாண்டி மேளம், காவடியாட்டம், கரகாட்டம், ஒயிலாட்டம், தேவராட்டம், வில்லுப்பாட்டு, உடுக்கடிப்பாட்டு, கதாகாலட்சேபம், திருவிழா காலங்களில் இவற்றைக் காணலாம். குமரி மண்ணில் வாழும் மலையாள மக்களால் யட்சகானம், கதகளி, ஓட்டன்துள்ளல் முதலான கலைகள் கொண்டாடப்படுகின்றன.

குமரி மாவட்டத்தின் சிறப்புகள்:

சுசீந்திரம் தாணுமாலயப் பெருமாள் கோயிலில் தெற்கு பிரகாரத்தில் உதயமார்த்தாண்டன் மண்டபம் உள்ளது. இங்கு 57 இசைத்தூண்கள் உள்ளன. ஒவ்வொன்றும் தட்டும் போது ஒவ்வொரு வகை இசையை எழுப்பும். இத்தகைய இசைத்தூண்களை பத்மனாபபுரம்


அரண்மனையிலும் காணலாம்.... இவற்றைக் கண்ணுறும் காலை நம் மண்ணில் வாழ்ந்த கலைநுட்ப வல்லுநர்களின் திறத்தை என்னென்பது?

கன்னியாகுமரி மகாத்மா காந்தி சிலையில் அக்டோபர் 2ஆம் நாள் சூரிய ஒளி சிலையில் விழுமாறு அமைத்துள்ளனர்... சுசீந்திரம் ஆலயத்தின் அனுமான் சிலை தென்னிந்தியாவிலேயே உயரமானது. சிதறால் மலைக்குகைக்கோயில் சமணர்கள் இங்கு வாழ்ந்தார்கள் என்பதற்கு சான்று..... முக்கடலும் முத்தமிடும் குமரி முனையும், தென்னை மரங்களும் குமரி மண்ணின் அடையாளங்கள்..... மாத்தூர் தொட்டி பாலம் குமரியின் புகழுக்கு மணிமகுடம்! குமரிக் குற்றாலம் எனும் திற்பரப்பு அருவியில் குளித்து மகிழ உலகமெங்குமுளோர் வந்து செல்கின்றனர்.



3 புனித சவேரியார் பேராலயம் கோட்டாறு

குமரி மண்ணின் பெருமையை எடுத்துக் கூறும் சிறப்பு மிக்க திருத்தலம் கோட்டாறு. கி.பி.1552ஆம் ஆண்டில் புனித சவேரியாரால் கட்டப்பட்டது ஓர் சிற்றாலயம். பின்னர் அருள்திரு. புச்சேரியோ அடிகளாரால் மண், மரம், ஓலை ஆகியவற்றால் ஓர் ஆலயம் அமைக்கப்பட்டது. 01.03.1603 முதல் அங்கு திருப்பலி நடத்தப்பட்டு வந்தது.... பின்னர் அந்த ஆலயம் 1640ல் கற்களால் கட்டப்பட்டது. தொடர்ந்து வந்த காலங்களில் பல மாற்றங்களுக்குப் பின்னர் இன்று நாம் காணும் பேராலயமாக அமைக்கப்பட்டது. புனித சவேரியாரின் பெயரில் உருவாக்கப்பட்ட உலகின் முதல் ஆலயம் இது. புனித சவேரியார் கி.பி.1622ல் புனிதராக அறிவிக்கப்பட்டவர். டிசம்பர் 3ஆம் நாள் இப்பேராலயத்தின் ஆண்டு விழா!



கொல்லம் மறைமாவட்டத்தின் கீழிருந்த கோட்டாறு 1930-ல் தனி மறைமாவட்டமானது. இதன் முதல் ஆயராக மேதகு லாரன்ஸ் பெரோரா பொறுப்பேற்றார்.



கைதிகள் கட்டிய கல்கோயில்

கிறித்தவ மறை பணியாளரான ரிங்கிள் தவுபே ஓர் ஐரோப்பியர். இறைப்பணிக்காக இந்தியாவுக்கு வந்தார். குமரி மண்ணில் மயிலாடியில் கி.பி.1806-ல் இறைப்பணியைத் தொடங்கினார். 1818ல் அவரின் இறைப்பணி மையம் நாகர்கோயிலுக்கு மாற்றப்பட்டது. அனைத்து பொறுப்புகளும் சார்ள்ஸ் மீட் ஐயரிடம் ஒப்படைக்கப்பட்டது. மீட் மிகச் சிறந்த கல்வியாளர். எனவே திருவாங்கூர் மகாராணி அவரை மாவட்ட நீதிபதியாக்கி உத்தரவிட்டார். மகாராணியார் அவருக்கு ஏராளமான நிலங்களை தானமாகக் கொடுத்தார்.

கி.பி.1819ல் மீட் ஐயர் ஓர் ஆலயம் கட்டும் பணியைத் தொடங்கினார். திருவாங்கூர் இராணியும் தஞ்சைமன்னரும் தாராளமாக அன்பளிப்புகள் தந்தனர். சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த கைதிகள் ஆலயத்தின் கட்டுமானப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர். பாரமான கற்களால் சுவர்கள் கட்டப்பட்டன. காடுகளிலிருந்து மிகப்பெரிய மரக்கட்டைகள் கொண்டு வரப்பட்டு பயன்படுத்தப்பட்டன. இப்பணிகளுக்கு யானைகள் பயன்படுத்தப்பட்டன. அந்த யானைகளை திருவாங்கூர் ராணி வழங்கினார். 1843ல் ஆலயம் அர்ச்சிக்கப்பட்டது. 1866 வரை இங்கு ஐரோப்பிய போதகர்கள் பணியாற்றினர்.

நீலகண்டன் தேவதாசன் என்பவரே இங்கு பணியாற்றிய முதல் இந்திய போதகர் ஆவார்.

இன்று ஹோம் சர்ச் என அழைக்கப்படும் இந்த ஆலயம் தென்னிந்தியத் திருச்சபையின் தலைமை பேராலயமாக சிறப்புடன் செயல்படுகிறது.. நாகர்கோயிலுக்கு பெருமை சேர்க்கும் இப்பேராலய கட்டுமானப் பணிகளை கைதிகள் செய்தார்கள் என்பது இதன் தனிச்சிறப்பு!



5

குமரி மண்ணின் கல்வித்தந்தை அருள்திரு. சூசைமிக்கேல் அடிகளார்

01-04-1906 - 24-07-1993

'கத்தோலிக்க சமயத்தின் குருகுல தனித்துவமே அதன் வளமை'' – மகாத்மா காந்தி

1. தோற்றுவாய் :



குமரி மண்ணிலே தோன்றி சமயப்பணியுடன் சமூகப்பணிகளையும் ஆற்றி கல்வித்தந்தை என போற்றப்பட்ட அருள்தந்தை சூசைமிக்கேல் அடிகளார் வாழ்க்கை, மாவட்ட வரலாற்றில் மகத்தான பதிவுகள் என்றால் மிகையில்லை... தான் வாழ்ந்த 87 ஆண்டுகளில் 60 ஆண்டுகள் கல்வி, சமூக, ஆன்மிக பணிகளை ஆற்றிய அந்த மாமேதை வாழ்ந்த மண்ணில் வாழ்கிறோம் என்பதே நம்பெருமை... அன்பு, அருள், ஆண்மை, அரசியல், சமூக பொருளாதார நலன்களை காத்த விடுதலை இறையியல் என்ற புதிய சித்தாந்தத்தின் நாயகன்

அன்னமிலார்க்கு
அன்னமாய் - வாழ
அகமில்லார்க்கு அகமாய்
நோயில் வருந்துவோர்க்கு நற்சுக மருந்தாய்
தாய்தந்தை இல்லார்க்கு அன்னாராய்

யாவர்க்கும் யாவுமாய் - (வேதநாயகன்)

வாழ்ந்தவர் தந்தையர்கள்!

அவர் வாழ்ந்து காட்டிய பாதை, சமூகப் பணியாற்றுவோர்க்கும் சமயப்பணி ஆற்றுவோர்க்கும் ஏன்-அரசியல் பணியாற்றுவோர்க்கும் கைக்கொண்டு ஒழுகத்தகும் சரியான பாடம்....

2. குடும்ப பின்னணி :

அருள்தந்தை சூசை மிக்கேல் அடிகளாரின் முப்பாட்டன்கள் புனித சவேரியாரால் திருமுழுக்கு பெற்றவர்கள். பரம்பரை பரம்பரையாக செல்வமும் செல்வாக்கும் மிக்க குடும்பம் அது. பொறியாளர்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், துணை ஆட்சியாளர்கள், விவசாய அதிகாரிகள், பேராசிரியர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தொழிலதிபர்கள் என தலை சிறந்த மனிதர்களைக் கொண்ட குடும்பம்... இன்றும் ஒன்பது குருக்கள் பன்னிரண்டு அருட்கன்னியர்களை திருச்சபைக்கு தந்த குடும்பம்....

3. தோற்றம்:-

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோயில் அருகே இராமன்புதூரில் மேற்சொன்ன சீர்மை மிக்கதோர் குடும்பத்திலே, பக்தி வைராக்கியம் மிக்க திரு. மரிய ஞானு என்பார்க்கும் திருமதி. சூசை மரியாயி அம்மை யாருக்கும் தலைமகனாய்த் தோன்றினார். அருள்தந்தை சூசைமிக்கேல் அடிகளார்! அந்த சூரியன் உதித்த நாள் 01.04.1906.

4. கல்வி :

தொடக்கக்கல்வியை கார்மல் பள்ளியில் நிலை ஒன்று முதல் எட்டுவரைக்கற்றுத் தேறினார். பின்னர் கோட்டாறு அரசு உயர்நிலைப்பள்ளியில் பயின்று நிலை-9 தேறினார். இறைப்பணியில் கொண்ட நாட்டத்தால் ஈர்க்கப்பட்டு இறை அழைத்தலுக்கு ஏற்புடையவரானார். அருள்தந்தை பர்னார்டு சுவாமிநாதன் அடிகளாரின் அறிவுரைகளை ஏற்று குருமடத்தில் சேர நாட்டம் கொண்டார். திரு.மரிய இருதயம் ஆசிரியர் தான் இவரை கொல்லம் கூட்டிச் சென்று 15.5.1925-ல் குருமடத்திலே சேர்த்தார். அது புனித ரபேல் இளையோர் குருமடம். அங்கு 10வது வகுப்பில் சேர்க்கப்பட்டு கல்வியும் கிடைத்தது. பத்தாம் வகுப்பு தேறியபின், கொல்லம் புனித தெரசா பெரிய குருமடத்தில் சேர்க்கப்பட்டார். அங்கு இலத்தீன் மெய்யியல், மறையியல் முதலானவற்றைக் கற்றார். பெரிய குருமடத்தில் தலைமைக் குருமாணவர் (Beadle) என்ற தகுதி கிட்டியது.

5. குருவாக :

1930ல் கொல்லம் மறைமாவட்டத்திலிருந்து தனிமாவட்டமான கோட்டாறு மறை மாவட்டத்திலிருந்த குருக்களின் எண்ணிக்கை-28. அவர்களுள் குமரி மண்ணின் மைந்தர்கள் எண்மர் மட்டுமே! கோட்டாறின் முதல் ஆயராக மேதகு லாரன்ஸ் பெரேரா நியமிக்கப்பட்டார். கொல்லம் ஆயராக இருந்த மனிதப் புனிதர் பென்சிகர் ஆண்டகைதான் 1922-ல் கார்மல் பள்ளியை நிறுவியவர்.

இந்த பின்னணியில் 1.4.1933ல் அருள்தந்தை சூசைமிக்கேல் அடிகளார் கோட்டாறு முதல் ஆயர் லாரன்ஸ்

பெரேரா ஆண்டகையால் குருப்பட்டம் வழங்கப்பட்டார். இந்த ஆயர் பொறுப்பேற்ற அன்றும் குருமாணவராய் தூய சவேரியார் திருபீடம் நுழைந்தவர் நம் தந்தையவர்கள்.

இவ்வாறு கோட்டாறு மண்ணின் 12வது குருவாக இராமன்புதூரின் முதல் குருவாக "ஆண்டவரே என் பலம்" என்ற விருது வாக்குடன் குருப்பட்டம் பெற்று கோட்டாறு தூய சவேரியார் பேராலயத்தில் துணை பங்கு குருவாக பணிப்பொறுப்பேற்றார்.

6. கோட்டாற்றின் முதல் குருக்கள்

1. அருட்தந்தை ஸ்தனிஸ்லாஸ் கோஸ்கா
2. அருட்தந்தை. இக்னேசியஸ் மரியா
3. அருட்தந்தை. மிக்கேல் குருசு
4. அருட்தந்தை எஸ்.டி. மத்தியாஸ்
5. அருட்தந்தை. விக்டர்
6. அருட்தந்தை. ஸ்தனிஸ்லாஸ் மரியா
7. அருட்தந்தை. ரப்பேல்
8. அருட்தந்தை. அம்புரோஸ் பல்தான்ஸ்
9. அருட்தந்தை. உபால்டு ராஜ்
10. அருட்தந்தை. இம்மானுவேல்
11. அருட்தந்தை. பவுல் செபஸ்தியான்
12. அருட்தந்தை. சூசை மிக்கேல்

7. பங்குத்தந்தையாக :

அ) காப்பிக்காடு

மறைமாவட்டத்தின் உதய கால ஒளிச்சுடர் என்று போற்றப்படும் தந்தை சூசைமிக்கேல் அடிகளார் காப்பிக்காடு

தனிப்பங்கானதும் நியமிக்கப்பட்ட முதல் பங்குத்தந்தை ஆவார்.

அப்போது அங்கு பள்ளி இல்லை. கட்டுவதற்கு நிலமும் இல்லை. தங்குவதற்கு இல்லமும் இல்லை. அங்கு தனியாருக்கு சொந்தமான பள்ளியொன்று தள்ளாடும் நிலையிலிருந்தது... அந்த பள்ளியை கேட்ட பெருந்தொகை கொடுத்து விலைக்கு வாங்கினார் தந்தை. பள்ளிக்கு போதிய இடவசதி இல்லை. எனவே கோயிலின் அருகில் இன்னொருவரிடமிருந்தும் பள்ளிக்கு போதுமான நிலத்தையும் வாங்கினார். இன்று அது உயர்நிலைப்பள்ளியாக உயர்ந்து நிற்கின்றது. அங்கு பங்கு பணியாளர் இல்லத்தையும் கட்டினார். "The Priest is Christs ambassador to men". ஒரு குரு எப்படி வாழவேண்டும் என்பதற்கு தந்தையவர்களின் வாழ்வே சிறந்தபாடம்.

அதுமுதல் அவர் பணியாற்றிய அனைத்து இடங்களிலும் ஆலயம், குருசடி, மதில் கட்டிடங்கள் குடிநீர் வசதி, சாலை, மின்வசதி, புதிய பாடசாலை என ஏதேனும் ஒன்று அவர் பெயரைச் சொல்லும் வகையில் நிறுவிக் கொண்டே வந்தார்.

மறக்க முடியுமா!

அவர் பணியாற்றிய தளங்களாவன:-

காப்பிக்காடு, முள்ளங்கனாவிளை, காட்டாவிளை, மங்கலக்குன்று, கானாவூர், அப்பட்டுவிளை, புலியூர்க்குறிச்சி, பத்மனாபபுரம், வில்லுக்குறி, கொன்னக்குழி விளை, சுங்கான்கடை, இரணியல், தாமரைக்குளம் ஆகிய

பங்குத்தளங்களில் அவர் செயலாற்றிய திட்டங்களை மறக்க முடியுமா? தந்தையையும் தான்!

ஆ) மங்கலக்குன்று :-

மங்கலக்குன்று பங்குதந்தையாக பொறுப்பேற்றதும் உடனடியாகச் செயலாற்றிய திட்டங்கள்.

1. பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக்கினார்.

2. பள்ளிக்கு போதிய கட்டிடங்கள் கட்டப்பட்டன.

3. சாலை ஓரம் காணப்படும் நீண்ட மதில் சுவர்

தந்தையின் பெயரைச் சொல்லிக் கொண்டே இருக்கும் மக்கள் பணிகள் இவை.

இ) காட்டாவிளை:

அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்
நன்குடையான கட்டே தெளிவு - குறள் 513.

காட்டாவிளை சுற்றுவட்டாரத்தில் முழுக்க முழுக்க பிற சமயத்தவர் வாழ்ந்து வந்தார்கள். தந்தையவர்களின் அன்பான அணுகுமுறையில் அவருடன் இணைந்தனர் மக்கள். நூற்றுக்கணக்கான நபர்களை திருமுழுக்கு கொடுத்து மறையில் சேர்த்தார். அங்கு அழகிய ஆலயம் ஒன்றையும் கட்டினார். அந்தச் செலவுகளுக்கு ஆயர் இல்லத்திலிருந்து வழங்கப்பட்ட தொகை வெறும் ரூ. 2000/- மட்டுமே... எஞ்சிய அனைத்து தொகையும் தந்தை தாமே செலவிட்டார்.... பங்குமக்களை சந்தித்து அவர்களிடம் நலம் விசாரிக்கும் காட்சி கருணையின் சாட்சி! அசையாத நம்பிக்கையும் ஆழ்ந்த ஆன்ம உணர்வும்